செ.வெ.எண்: 497/2020 நாள்: 07.12.2020

**திருவண்ணாமலையில் இராணுவ ஆள்சேர்ப்பு முகாம்**
**10.02.2021 முதல் 26.02.2021 வரை நடைபெறுகிறது**
**மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது...**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அருணை பொறியியல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், சென்னை மண்டல இராணுவ தலைமை அலுவலகம் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக 10.02.2021 முதல் 26.02.2021 வரை நடைபெறும் இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியரக கூட்ட அரங்கில் இன்று (07.12.2020) நடைபெற்றது. இக்கூட்டத்தில், சென்னை இராணுவ ஆள்சேர்ப்பு அலுவலக இயக்குநர் கர்னல் கௌரவ் சேத்தி (Chennai Army Recruiting Office Director Colonel Gaurav Sethi), மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திருமதி. வனிதா, முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் முன்னாள் கேப்டன் சீ. விஜயகுமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. அமீத்குமார், இ.ஆ.ப., துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. அஜீதா பேகம் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

www.Tamilanwork.com

திருவண்ணாமலையில் நடைபெறும் இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில் பல்வேறு துறைகள் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்த விரிவான ஆய்வுக் கூட்டம் இன்று (07.12.2020) மாவட்ட ஆட்சியர் தலைவமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், காவல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சுகாதாரத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, வருவாய்த் துறை, விளையாட்டுத் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், போக்குவரத்துத் துறை, மகளிர் திட்டம், பொதுப்பணித் துறை ஆகிய துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விரிவாக எடுத்துதரைக்கப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அருணை பொறியியல் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், சென்னை மண்டல இராணுவ தலைமை அலுவலகம் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக 10.02.2021 முதல் 26.02.2021 வரை நடைபெறுகிறது. இம்முகாமில் தமிழகத்தில் உள்ள சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் ஆகிய 11 மாவட்டங்களிலிருந்தும் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலிருந்தும், ஏற்கனவே இராணுவ ஆள்சேர்ப்பு முகாமிற்கு கடந்த 01.03.2020 முதல் 31.03.2020 வரை நடைபெற்ற ஆன்லைனில் விண்ணப்பித்துள்ள இளைஞர்கள் மட்டும் கலந்து கொள்ள அனுமதி அளிக்கப்படுவார்கள். ஆன்லைன் மூலம் 25,000 இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில் கலந்து கொள்வதற்கு தினமும் 2000 இளைஞர்கள் பங்கேற்க அனுமதி அளிக்கப்படும்.

www.Tamilanwork.com

திருவண்ணாமலையில் நடைபெறும் இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில், சிப்பாய் தொழில்நுட்பம் (Soldier Technical), சிப்பாய் நர்சிங் உதவியாளர் (Soldier Nursing Assistant), சிப்பாய் நர்சிங் உதவியாளர் கால்நடை (Soldier Nursing Assistant Veterinary), சிப்பாய் எழுத்தர் மற்றும் ஸ்டோர் கீப்பர் தொழில்நுட்பம் (Soldier Clerk & Store Keeper Technical), சிப்பாய் பொது பணி (Soldier General Duty), சிப்பாய் வர்த்தகர் (Soldier Tradesman) ஆகிய பணியிடங்களுக்கு இளைஞர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில் கலந்து கொள்வதற்கான அனுமதி அட்டை (Admit Card) இணையதளத்தில் அல்லது விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியில் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்துக் கொண்டு முகாம் நடைபெறும் இடத்திற்கு கொண்டு வர வேண்டும். இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் இடைத்தரகர்களை நம்பி ஏமாற வேண்டாம். இராணுவ ஆள்சேர்ப்பு செயல்முறை முழுமையாக தானியங்கி (Fully Automated) செயல்பாடாகும்.

இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில் உடல்தகுதி மருத்துவ மற்றும் எழுத்து தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு யாரும் உதவி செய்ய முடியாது. இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில் கலந்து கொள்ளும் இளைஞர்களின் கடினமான உழைப்பினால் மட்டுமே தேர்வாக முடியும். விண்ணப்பதாரர்கள் 10 மற்றும் 12-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், பட்டப்படிப்பு மதிப்பெண் சான்றிதழ், குடியுரிமை, சாதி மற்றும் பிறப்பு ஆகிய சான்றிதழ்கள், அசல் மற்றும் நகலுடன் முகாம் நடைபெறும் நாள் அன்று கொண்டு வரவேண்டும். இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில் கலந்து கொள்பவர்களுக்கு உடற்தகுதி தேர்வு நடத்தப்படும். இதில், 1.6 கி.மீ. தூரம் ஓட்டப்பந்தயம், 9-அடி கால்வாய் தாவுதல் (Ditch Jump), Pull Ups, Zig-Zag Balance ஆகிய உடற்தகுதி தேர்வுகள் நடத்தப்படும். இதனை தொடர்ந்து உடல் அளவீடுகளுக்கான தேர்வு (Physical Measurement Test) மற்றும் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

திருவண்ணாமலையில் நடைபெறும் இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில் தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள் சென்னை மண்டல இராணுவ ஆள்சேர்ப்பு தலைமை அலுவலகம் மூலம் நடத்தப்படும் பொது நுழைவுத் தேர்வில் (Common Entrance Examination) கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இத்தேர்வு குறித்த தேதி மற்றும் இடம் பின்னர் அறிவிக்கப்படும். இராணுவ ஆள்சேர்ப்பு முகாமில் கலந்து கொள்வதற்கான அனுமதி அட்டை (Admit Card) மற்றும் இதர விவரங்கள் குறித்த தகவல்கள் www.joinindianarmy.nic.in என்ற இணையதள முகவரியில் விரைவில் வெளியிடப்படும். மேலும், ஆன்லைனில் விண்ணப்பத்தவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கும் தகவல்கள் தெரிவிக்கப்படும்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**


ARMY


படை வீரர் கொடி நாள்
DISTRICT COLLECTOR
TIRUVANNAMALAI
REDMI NOTE 8 PRO
AI QUAD CAMERA

